1971 டிசம்பர் 18]

தைரியத்தை ஏற்படுத்திவிடும் என்று கருதுகிறேன். இதைப்பற்றி பாராளுமன்றத்தில் அந்தத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது, கட்டாயம் வரும், விரைவில் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஏற்படுகிற கால தாமதத்தைத் தவிர்க்க முடியாது. காரணம், இன்றைக்கு என்ன முடிவு எடுக்கிறோமோ அதுதான் அந்தத் தொழிற்சாலையின் லாப நஷ்டத்தை எதிர்காலத்தில் நிர்ணயிக்க இருக்கிறது. ஆகவே What types of steel products we are going to produce என்று நிர்ணயிப்பது முக்கியம். அதில் சிறிது காலம் எடுத்தாலும், அதைப்பற்றிக் கவலையில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, உருக்காலை வரும், மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தாகிவிட்டது, என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்னும் வேலை தொடங்கப்படவில்லை. ஆகவே இன்னும் எவ்வளவு நாட்கள் ஆகும், அதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அதைப்பற்றி விளக்கினேன்.

மணலியிலுள்ள உர உற்பத்தி ஆலை

* 571. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மணலி உர உற்பத்தி ஆலை பூர்த்தியடைந்து செயல் படத் தொடங்கிவிட்டதா ?

(இ) இல்லை எனில் எப்போது தொடங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மணலி உர உற்பத்தி ஆலை கடந்த செப்டம்பர் மாதத்தில் வியாபார ரீதியில் உற்பத்தி தொடங்கிவிட்டது. உற்பத்தி தொடங்கிய பன்னிரண்டு மாதத்திற்குள் முழு உற்பத்தித் திறனை எட்டிவிடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த மணலி உர உற்பத்தி ஆலையினுடைய மொத்த மூலதனம் எவ்வளவு ? அதிலே தமிழக அரசின் பங்கு எவ்வளவு ? அதன் நிர்வாகத்தில் தமிழக அரசின் பொறுப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மணலி உரத் தொழிற்சாலையில் தமிழக அரசுக்கு மூலதனத்தில் பங்கு இல்லை. அதில் மத்திய அரசு 51 சதவீதமும், வெளிநாடுகள் 49 சதவீதமும் மூலதனம் போட்டிருக்கிறார்கள். மொத்த மூலதனம் சுமார் 69 கோடி.

THIRU K. M. SUBRAMANIAM : May I know whether there is any possibility of production programme being affected here because of the Aid Programme stoppage from foreign countries?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது. இதிலே எந்தவிதமான தடையும் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரசாயன நூல்களிலிருந்து கைத்தறித் துணிகள் உற்பத்தி

*** 572 வினா—திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

டெரிலின் முதலிய செயற்கை ரசாயன நூல்களிலிருந்து கைத்தறி ஆடைகள் உற்பத்தி செய்ய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

பள்ளிப்பட்டுத்துணை வட்டத்தில் உள்ள சீதாராமபுரம் ஏரி

*** 573 வினா—திரு. இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டுத் துணை வட்டம் சீதாராமபுரம் ஏரியை ரிப்பேர் செய்ய எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத் திட்டத்திற்கு மேற்பார்வை பொறியாளர் ஒப்புதல் வழங்கப்பெற்ற பின்னர் வேலை தொடங்கப்படும்.

தளவாய் ஏரி மராமத்து

*** 574 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் கணியம்பாடி தொகுதியைச் சார்ந்த தளவாய் ஏரி பழுது பார்க்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :—

(அ) & (இ) தளவாய் ஏரி 1970-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பழுதுபார்க்கப்பட்டது.